REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 2உ திங்கள் (18—7—55) ★ ★ வெளியீடு: ஆடி 3உ செவ்வாய் (19—7—55) [இதழ் 29

குடும்பப் பொறுப்பேற்கும் கன்னியருக்கு!

உபகாரச் சம்பளம் தர மசோதா

தங்களின் வயதுவந்த தாய் தந்தையர் அல்லது சின்னஞ் சிறு சகோதர-சகோதரிகளைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதினால், திருமணம் செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தையே இழந்துவிட்ட கன்னிப் பெண்களுக்கு உபகாரச் சம்பளம் தர வழி செய்யும் மசோதா ஒன்று இத்தாலி மக்கள் சபையில் கொண்டு வரப்படுகிறதாம்!

பிழைப்புக்குப் பொருள் தேட முடியாத நிலையில் உள்ள கணவர்களைக் கொண்ட மனைவியருக்கும் 'பென்ஷன்' வழங்குவதற்கு அம்மசோதா வழி செய்யுமாம்!

விவசாயத் தொழிலாளர்கள் நிலை!

'அமைதி நிலைமை'க்கு அதிர்ச்சிவைத்தியமாம்

பலவீனம் காரணமாகத் தடையை நீக்கவில்லையாம்!

சாந்திகார், ஜூலை 17—

"அகாலிதளத்தவரின் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கை முழக்கத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை சர்க்கார் நீக்கிவிட்டது என்பதினால், அகாலியருக்கு சர்க்கார் பணிந்து கொடுத்துவிட்டது என்று யாரும் தவருக நினைத்துக் கொள்ள வேண்டாம்,"

என்று, பஞ்சாப் முதன் மந்திரி பீம்சேன் சச்சார் கூறியிருக்கிருர்.

"தடையுத்தரவு முடிவடைவதற்கு 8 தினங்களுக்கு முன்னர் அத்தடையை நீக்கியது—மக்களின் மனதை அமைதியான சூழ்நிலைக்குத் திருப்புவதற்காகச் செய்யப்பட்ட ஒரு 'அதிர்ச்சி மருத்துவம்' ஆகும்,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

சர்க்கார் தன்னுடைய பலக் குறைவின் காரணமாக இத்தடையை நீக்கவில்லை என்றும், எந்த நிலைமை ஏற்பட்டாலும் அதனைச் சமாளிக்கச் சர்க்கார் தயாராக, உறுதியுடனேயே இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

★

'மந்திரி சபையை 'டிஸ்மிஸ்' செய்க!'

'ஜனதிபதி ஆட்சியை ஏற்படுத்துக!'

அமிருதசரஸ், ஜூலை 18—

பஞ்சாப் மாநிலத்தில் சச்சார் மந்திரி சபையை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு ஜனதிபதி ஆட்சி ஏற்படுத்த வேண்டுமென்று இங்கு நடைபெற்ற மகா பஞ்சாப் மாநாடு கோரிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

★

நிலவரி அமைச்சர் வெளியேறினர்!

பாடியாலா, ஜூலை 18—

'பெப்சு மாநில முதலமைச்சர் பழிவாங்கும் நோக்குடன் நடந்து கொள்கிருர்,' என்று கூறி, பெப்சு நிலவரி அமைச்சர் தமது குழுவினருடன் சட்டசபையை விட்டு வெளியேறினர் என்று பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

★

'தடை செய்தது செல்லத்தக்கதல்ல!'

அமிருதசரஸ், ஜூலை 17—

பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கை முழக்கத்திற்கு மாநில சர்க்கார், கிரிமினல் பு. கோ. 144-வது பிரிவின்படி தடை செய்தது செல்லத்தக்கதல்ல என்று தலைமை உயர் நீதிமன்றத்திற்கு மனுச் செய்து கொள்வதென சிரோமணி அகாலி தளத்தின் நிர்வாகக் குழு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடநாட்டவர்க்கு வாழ்வும் தென்னாட்டவர்க்கு தாழ்வும்

சர்க்கார் தரும் புள்ளிவிவரங்கள் படம் பிடிக்கின்றன

புதுடில்லி, ஜூலை 17—

வடக்கின் வளரும், தெற்கின் தேய்வும் பற்றி மேலும் மேலும், நெஞ்சை உலுக்கும் செய்திகள் கிடைத்தவண்ணமிருக்கின்றன.

விவசாயத் தொழில் புரியும் குடும்பம் ஒன்றின், ஓராண்டு சராசரி வருமானம் வடமேற்கு இந்தியாவில் ரூ. 651; ஆனால், தென்னாட்டில் ரூ. 382 மட்டும்தான்.

வட்டாரவாரியாக—வட இந்தியா ரூ. 551; கிழக்கிந்தியா ரூ. 506; மேற்கிந்தியா ரூ. 391; மத்திய இந்தியா ரூ. 417; தென் இந்தியா ரூ. 382—என்று அமைகிறது.

இந்தியப் பேரரசு 1950—51-ல் மேற்கொண்ட அகில இந்திய விவசாயத் தொழில் விசாரணையின் பலனாய் கிடைத்த விபரங்கள்தாம் இவை.

ஒரு விவசாயக் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக வேலை கிடைக்கும் நாட்கள் வடஇந்தியாவில் 289 ஆகும்; ஆனால் தென் இந்தியாவில் 181 நாட்களுக்குத்தான் விவசாயக் குடும்பங்கட்கு வேலை கிடைக்கிறது.

மத்திய இந்தியா 245; கிழக்கிந்தியா 224; மேற்கிந்தியா 196 நாட்கள்—என்று அமைகின்றன.

வேறெல்லாப் பகுதிகளையும்விட தென் இந்தியாவில்தான் வேலை நாட்கள் மிகக் குறைவு; வடஇந்தியாவில்தான் வேலை நாட்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தகுந்தது.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாது போய்விடுவதும், பற்றாத வேலை கிடைப்பதும்கூட தென்னாட்டில்தான் அதிகமாக நிலவுவதாக விசாரணை தெரிவிக்கிறது.

சுமார் 20 சத விகித தொழிலாளர்களைப் பாதிக்கும் வண்ணம், தென்னாட்டு விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு 115 நாட்களுக்கு வேலை கிடைப்பதில்லை; ஆனால், அதே காலத்தில் வடஇந்தியாவில் விவசாயிகளுக்கு வேலை கிடைக்காமலிருப்பது, 44-நாட்களுக்கு மட்டும்தான்!

வேலை கிடைப்பதில், வட இந்தியாவில், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அதிகமான நாட்கள் வேலை கிடைக்கின்றன.

வடநாட்டில் விவசாயப் பெண்களுக்கு 143 நாட்கள் வேலை கிடைக்கிறது; தென்னாட்டில் 139 நாட்களுக்குத்தான் கிடைக்கிறது.

செலவு வகையில் வடமேற்கு இந்தியாவினர் மிக அதிகமாகவும், மேற்கு இந்தியாவினர் மிகக் குறைவாகவும் செலவிடுபவர்களாயிருக்கின்றனர்; அவர்கள் முறையே ரூ. 674; ரூ. 392—செலவிடுகின்றனராம்.

மத்திய இந்தியா ரூ. 428; வடஇந்தியா ரூ. 548; கிழக்கிந்தியா ரூ. 528; தென்னிந்தியா ரூ. 397—என்ற வகையிலிருக்கின்றன.

மொத்த வருமானத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் 6.5 சதவிகிதம்—அல்லது ரூ. 30 சில்லறைச் செலவுகள் செய்யப்படுகின்றனவாம்; இந்தச் சில்லறைச் செலவுகளில் புகையிலை, வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட், சோப்பு, மருந்து முதலியன அடங்குகின்றனவாம்.

இந்த வகைச் செலவில் வேறெல்லா வட்டாரங்களையும்விட தென்னாட்டினர்தான் அதிகமாகச் செலவு செய்கின்றனர்.

இந்தியாவில் மொத்தமாக சராசரி ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரி வருடச் செலவு ரூ. 468-ல், 80 சத விகிதத்திற்கு மேல் உணவுப் பொருள்களுக்காகச் செலவிடப்படுகின்றதாம்.

கான்பூர் வேலை நிறுத்தம்

இன்று முடிவடையும்?

கடந்த 77 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவந்த கான்பூர் ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் இன்று நிறுத்தப்பட்டுவிடுமெனத் தெரிகிறது.

மீன் காட்சிச்சாலை மீண்டும் ஆரம்பம்

சென்னை பல்கலைக் கழகக் கட்டிடத்திற்கு எதிராக நவீன முறையில் புதிய மீன் காட்சிச்சாலை ஒன்று அமைக்கும் வரை, மெரினா கடற்கரையில் ஏற்கனவே இருக்கும் கட்டிடத்திலேயே மீன் காட்சிச்சாலையை ஆரம்பிக்குமாறு சர்க்கார் அனுமதித்துள்ளனராம்.

வெளிநாட்டு செய்திப் போக்குவரத்து

அபிவிருத்திக்காக ரூ. 5 கோடியில் திட்டம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்படி, இந்தியாவின் வெளிநாட்டு செய்திப் போக்குவரத்துத் துறை அபிவிருத்திக்காக 5 கோடி செலவில் விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முதல் திட்டத்தில் ரூ. 1 கோடி மட்டுமே இத்துறைக்கு ஒதுக்கப்பட்டதாம்.

இரண்டாம் திட்டப்படி மிக நவீனமான சாதனங்கள், இயந்திரங்கள் எல்லாம் செய்திப் போக்குவரத்துத் துறைக்கு வாங்கப்படும் என்றும், எல்லா முனைகளிலும், செய்திப் போக்குவரத்து விரிவுபடுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது

இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, கல்கத்தாவிலிருந்து இலண்டனுக்கு நேரடி 'டெலிபோன்' தொடர்பு ஏற்பட்டுவிடும் என்றும், அதனால் இப்போது பம்பாய் நகரத்தின் 'டெலிபோன்' வேலைப்பளு பாதி குறையுமென்றும் கூறப்படுகிறது.

கல்கத்தாவிலிருந்து 25 மைல் தொலைவில் உள்ள காஞ்சாப்பரா எனும் நகரில் ரூ 12 லட்சம் செலவில் கிழக்கிந்தியாவின் வெளிநாட்டு செய்திப் போக்குவரத்தினை அபிவிருத்தி செய்வதற்கான பிரம்மாண்டமான நிலையம் ஒன்று உருவாகி வருவதாகவும் கூறப்படுகிறது.

தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் செய்திப் போக்குவரத்து வைத்துக்கொள்வதில் செய்திகளை அனுப்புவதும், செய்திகளை வாங்குவதுமான வேலைகளுக்கு இந்தியாவின் மையமாக சென்னை அமையும் என்றும் கூறப்படுகிறது.

அம்பாலா, ஜூலை 17—

இந்திய சர்க்கார் தபால்—தந்தி இலாகாவில் பணியாற்றும் மூன்றாந்தர, நான்காந்தர சிப்பந்திகளின் குறைகளைக் கவனிக்க, அப்பீல் நீதிமன்றம் போன்றதொரு நீதிமன்றத்தை அமைக்க சர்க்கார் உத்தேசித்துள்ளதென மத்திய தபால்-தந்தி அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியிருக்கிருர்.

ஜினீவா மாநாடு ஆரம்பம்

உலக நெருக்கடிகளுக்கு பரிகாரம் காணப்படும்?

ஜினீவா, ஜூலை 18—

உலக முழுமையும் கடந்த சில தினங்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஜினீவாவில் நடைபெறும் 4 வல்லரசு மாநாடு இன்று ஆரம்பமாகியிருக்கிறது. இந்த மாநாடு உலக நெருக்கடியைத் தணித்து அகில உலக சமாதானத்திற்கு அடிகோலுவதற்கான வழி வகைகள் குறித்து விவாதிப்பதற்காக அமையும்.

இம்மாநாட்டில், சர்வ தேசத்தில் நிலவும் நெருக்கடிக்கான காரணங்கள், ஜெர்மனி இணைப்பு, ஐரோப்பியப் பாதுகாப்பு, உலக ஆயுதக் குறைப்பு ஆகியவைகளே விவாதிக்கப்பட இருக்கும் அம்சங்கள் முக்கியமானவையாகும்.

இந்தோ-சீன உட்பட குறிப்பிட்ட சில தூரக்கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளைப் பற்றியும் இம்மாநாட்டில் விவாதிக்கவேண்டுமென்று சோவியத் கோரலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த முறைதான், நான்கு வல்லரசுகளான ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் அதிபர்கள் ஒன்று கூடுகின்றனர்.

இம்மாநாட்டில்—சோவியத் சர்க்கார் பிரதிநிதிகளாக சோவியத் பிரதமர் நிகோலாய் புல்கானின், சோவியத் அயல் நாட்டு அமைச்சர் மாலடோவ்; அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர், இராஜாங்க அமைச்சர் டல்லஸ்; பிரிட்டன் பிரதமர் ஈடன், அயல் நாட்டமைச்சர் மாக்மில்லன்; பிரான்ஸ் பிரதமர் பாவ்ரே, அயல் நாட்டமைச்சர் பினே—ஆகியோர் கலந்துகொள்வர்.

★

சோவியத் தலைவர்களுக்கு அமெரிக்க தலைவர்விருந்து

ஜினீவா, ஜூலை 18—

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர், சோவியத் பிரதமர் புல்கானினையும் மற்ற சோவியத் தலைவர்களையும் விருந்துக்கு அழைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

3,000 கைதிகள் 'உண்ணவிரதம்!'

விடுதலை கோரி நடவடிக்கை!

பெய்ரூத் (லெபனன்), ஜூலை 18

தங்களுக்கு விடுதலை வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக, இங்குள்ள இரு பெரும் சிறைக்கூடங்களில் உள்ள சுமார் 3,000 கைதிகள் உண்ணவிரதம் மேற்கொண்டிருக்கின்றனராம்!

எட்டு நாட்களுக்கும் அதிகமாகவே உணவேதும் உட்கொள்ளாத சுமார் 15 கைதிகள் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். அவர்கள், தங்கள் புகார்களை நேரில் கூறுவதற்காக அந்நாட்டுப் பிரதமர் சிறைக்கு வருகை தரவேண்டுமென்று கோரியிருக்கின்றனராம்.

இந்தப் பட்டினிப் போரைத் தூண்டியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று சிறை அதிகாரிகள் கூறுகின்றனராம்.

உண்ணவிரதமிருப்பவர்கள் எல்லாரும், ஒரு மாதத்திற்கு முன்பு துருக்கி குடியரசுத் தலைவர் அந்நாட்டிற்கு வருகை தந்தபோது, பாதுகாப்பு கருதி கைது செய்யப்பட்டவர்களாம்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—7—'55 திங்கள்

நால்வர் நாடகம்!

யுத்தங்கள், மனித சமூகத்தை, அதன் வரலாறு நெடுக அச்சுறுத்திக்கொண்டே வந்திருக்கின்றன; ஒரு பெரும் போரின் கொடிய விளைவுகள், போர் நிகழ்ந்த தலைமுறை மக்களை மட்டுமின்றி, தொடர்ந்து பல தலைமுறை மக்களையும் அலைக்கழிக்கிற அளவுக்கு 'அழிவாற்றல்' கொண்டவையாக இருந்துவருகின்றன.

உலகின் எந்த ஒரு கோடியில் மக்கள் வாழ்பவர்களாயினும், நவீன காலப் போர்களின் கோரமான அனுபவங்களின் கசப்பினை அவர்கள் சுவைத்தவர்களாகத்தான் இருக்க முடியும்; ஏனெனில் நவீன காலப் போர்கள், 'ஒரு நாட்டிற்கும் —இன்னொரு நாட்டிற்கும்' என்று எல்லை வகுத்துக் கொண்டு நிகழ்வனவாகவின்றி, எங்கோ ஒரு குறுகிய நிலப் பரப்பில் இரு சாராரிடையே பரிமாறிக்கொள்ளப்படும் 'குத்து வெட்டுக்கள்,' உலக முழுமையிலுமுள்ள மக்களின் வாழ்வெனும் முதுகில் வடுக்களைப் பொறிக்கச் செய்யும் பொல்லாத குணம் கொண்டவையாக இருக்கின்றன.

அதனுல்தான், 'எங்கோ எவனைவனே அடித்துக் கொண்டு சாகிருன் — நமக்கென்ன நஷ்டம்?'—என்று, எந்த ஒரு பகுதி மக்களும் இன்று வாளாயிருந்துவிட முடிவதில்லை.

இன்றைய தலைமுறை மக்கள், கடந்த அரை நூற்றுண்டில், சூழலும் உலகம் சந்தித்த இரு பெரும் போர் அனுபவங்கள் தந்த சோகத்தில் உழன்று உழன்று, இனியும் ஒரு போர் மூளுவதை எண்ணிப் பார்க்கவும் விரும்பாதவர்களாக இருக்கின்றனர்.

இறுதியாக, இன்றைக்கு சுமார் பத்தாண்டுகளுக்கு முன் முடிவுற்ற உலகப் பெரும் போரின் விளைவாக ஈடு செய்ய முடியாத கஷ்ட, நஷ்டங்கள் இமயமென வளர்ந்திருப்பதை இன்னும் தேம்பி அழுதபடி பார்த்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு, போர் என்ற சொல்லின் உச்சரிப்பே அதன் விளைவுகள் ஊட்டும் அச்சத்தைவிட அதிக அதிர்ச்சியைத் தருவதாக இருக்கிறது.

"இனி, 'போர் அரக்கன்' தலைதூக்க மாட்டான்," என்று மக்கள் நம்புகிற வகையில் உலக நிலை இருக்கவில்லை என்பதையும், உலகம் இன்னும் அவ்வப்போது 'போர்' என்ற சொல்லின் தாக்குதலால் அடிக்கடி அதிர்ச்சியுற்று வருகிறது என்பதையும், அந்த அதிர்ச்சியையூட்டுபவர்கள் பட்டியலில், எவரெவர், எவை எவையுடன் இடம் பெற்றிருக்கின்றனர் என்பதையும் நாம் இங்கு அவ்வப்போது எழுதி வந்திருக்கிறோம்.

'போர் மூளுமா?' என்ற கேள்வி தரும் அச்சத்தால் மக்கள் நடுநடுங்கிக் கொண்டிருக்கும் நிலையை மாற்றவும், 'போர் மூளுமா?' என்ற அந்தக் கேள்விக்கு ஆதாரமாக அமையும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசவும், இன்று, உலகத்தின் பெரும் வல்லரசுகள் என்று வர்ணிக்கப்படுகிற ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளும் ஜினீவாவில் மாநாடு ஒன்றில் பேசத் துவங்கி இருப்பர்,

நான்கு வல்லரசுகளும், உலக நெருக்கடியைத் தணிக்கும் பொருட்டு-நெருக்கடியை வளர்க்கும் பிரச்சினைகள் பற்றிப் பேச வேண்டியவைகளாயிருக்கின்றன.

நான்கு வல்லரசுகளும், 'உலகத்தில் போர் தேவையில்லை; சமாதானம் வேண்டும்; தகராறுகளைத் தீர்க்க தடியும், தண்டல்காரத்தனமும் தேவையற்றவை; சுமூகமான பேச்சு வார்த்தைகளாலேயே தகராறுகளுக்கு முடிவு காண முடியும்' என்று கூறுபவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில், 'உலக முழுவதையுமே புல், பூண்டுகளோடுகிர்மூலமாக்கும் 'பேராற்றல் கொண்டவை என வர்ணிக்கப்படும் நீர்வளிக்குண்டுகளையும், அணுகுண்டுகளையும் அணி அணியாக அடுக்கி வைத்திருக்கிறோம்,' என்று அமெரிக்காவும், 'அவளுக்கு நான் என்ன மட்டமா?' என்ற பாணியில் 'நீர்வளி, அணுகுண்டுகள் தயாரிப்பில் அமெரிக்காதான் பின்தங்கிக் கிடக்கிறது—நாங்கள் அல்ல,' என்று ரஷ்யாவும், 'மக்களின் அனுமதியைப் பெற்று விட்டோம், அணுகுண்டுகள் தயாரிக்க,' என்று பிரிட்டனும், பிரான்சும் கூறிக்கொண்டு தான் இருக்கின்றன.

நான்கு வல்லரசுகளும், தங்களிடம் அத்தகு அழிவுச் சாதனங்களைப் பெருக்கி வைத்திருப்பதற்குக் காரணங்கள் பலப்பல கூறலாம்.

ஆனால், அப்படிக் கூறப்படும் காரணங்கள், கூறுகிறவர்களின் இராஜதந்திர, அரசியல், மதிநுக, சொற் சாதுரியத் திறன்களை அளவிடப் பயன்படலாமே தவிர, 'அமெரிக்காவிடமுள்ள அணுகுண்டுதான் அழிவாற்றல் கொண்டது — ரஷ்யாவிடமிருப்பது அப்படிப்பட்டது அல்ல,' என்றோ, 'அமெரிக்கர்கள்தான் நீர்வளிக்குண்டை உபயோகிப்பார்கள் — பிரிட்டன் தயாரித்தாலும் உபயோகிக்காது,' என்றோ, அச்சத்தால் நடுங்கிக்கிடக்கும் மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டக்கூடியன என்று கூற முடியாது.

இந்த நான்கு வல்லரசுகளும் தான், உலகத்தின் நெருக்கடியைத் தளர்த்தவேண்டி ஜினீவாவில் கூடுகிறார்கள்.

பிரச்சினைகள் எண்ணற்றவை இருக்கின்றன. செஞ்சீன அங்கீகாரம், பார்மோசா, இந்தோ—சீனு, கொரியா, துண்டுபட்டுக் கிடக்கும் ஜெர்மனி—இப்படிப் பலப்பல.

உலக மக்களின் விருப்பங்களோ அணு ஆயுத உற்பத்தியையும், பரிசோதனையையும் தடை செய்யவேண்டும்—'உலக சமாதானம் நிலவ வேண்டும்,' என்று பேசுவோர் தாங்கள் குவித்துள்ள ஆயுதங்களையும், திரட்டியுள்ள துருப்புகளையும் வெகுவாகக் குறைக்க வேண்டும்—நிரந்தர சமாதானத்திற்கு வழி கோலும் வகையில், பல்வேறு அரசு முறைகளில் நிலவும் முரண்பாடுகளைக் காட்டி தகராறுகளைக் கிளப்புவதை கைவிட வேண்டும் — என்பன போன்ற எண்ணற்றவைகளாகும்.

இப்படி, தங்கள் முன்னுள்ள பிரச்சினைகளையும், உலக மக்களின் விருப்பங்களையும் நான்கு வல்லரசுகளும் உள்ளத் தூய்மையுடன் புரிந்துகொண்டு, ஒருவரின் நல்லெண்ணத்தை மற்றவர் சந்தேகிக்காது பிரச்சினைகளை அணுகினால், அப்பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகளும், உலக மக்களின் விருப்பங்கள் நிறைவேற வழி வகையும் பிறப்பதின் மூலம், உலக நெருக்கடியைத் தளர்த்த நால்வர் முயற்சிப்பது வீண் போகாது —என்று மக்கள் நம்புகிறார்கள்.

'போர் வெறியர்கள்' என்று தூற்றப்படுவோர், நால்வர் கூடுவதை விரும்பாமலிருந்தனர்—ஜினீவாவில் இதற்கு முன் நடைபெற்ற பல மாநாடுகளின் முடிவுகள், எதிர்பார்த்த பலனை நடைமுறையில் தரவில்லை என்ற ஐயப்பாடுகளிடையே நடைபெறும் நால்வர் மாநாடு, 'வெறும் நாடகம்' என்ற நிலையைப் பெறக்கூடாது என்றும் மக்கள் விரும்புகிறார்கள்.

ரூ. 30-கோடி செலவில் நிலப் பாதுகாப்பு

இரண்டாம் திட்டத்தில் ஏற்பாடாம்

இந்திய சர்க்கார் உணவு இலாகா ரூ 30 கோடிக்கு மேல் செலவாகக்கூடிய நிலப் பாதுகாப்புக்கான இணைப்பான திட்டமொன்றை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் சேர்த்துக் கொள்வதற்கெனத் தயாரித்துள்ளனராம்.

மேலும், மாநிலங்களில், நிலத்தைப் பாதுகாப்பதற்காக என்று ரூ. 20 கோடி ஒதுக்கவும் சிபாரிசு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தினுல், மண் அரிப்பு கடுமையாக இருக்கும் பிரதேசங்களில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வழி செய்யப்பட்டிருப்பதாகவும், இராஜஸ்தான் பாலைவெளியில் 200 சதுர மைல் பிரதேசத்தில் காடு வளர்க்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

பாகிஸ்தானில் புதிய கட்சி!

6 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த இளவரசர் முயற்சி

கலாத் மன்னரான கான் என்பாரின் சோதரர் இளவரசர் கரீம் 'மக்கள் கட்சி' என்ற பெயரில் புதியதோர் கட்சியை நிறுவியிருப்பதாகத் தெரியவருகிறது.

இளவரசர் கரீம், 'கலாத் சமஸ்தானம் பாகிஸ்தானுடன் இணையக் கூடாது,' என்று, 1948-ல், தன் அண்ணனுக்கு எதிராக 'புரட்சி'யில் ஈடுபட்டார்; பின்னர் அவரை பாக் அதிகாரிகள் கைது செய்தனர்; ஆறாண்டு கால சிறை வாழ்வுக்குப் பின் அவர் சமீபத்தில் தான் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

மாநில சுயாட்சிக்காகவும், பாகிஸ்தானை ஒரு மக்கள் குடியாட்சியாக மலரச் செய்யவும் தனது கட்சி பாடுபடப் போவதாக இளவரசர் கரீம் அறிவித்திருக்கிறார்.

'இந்தியை தேசீய மொழி எனக் கூறுவது பொருந்தாது'

'இந்தி பேசப்படாத பகுதிகளில் அதைப் புகுத்துவது பலன் தராது'

'கல்லூரி போதனு மொழியாக அது ஆக்கப்பட்டால் நாடு முழுதுமே கேடுறும்'

'தனிப்பட்ட கல்வி நிலையங்களில் ஆங்கிலமே போதனு மொழியாக இருக்க அனுமதிக்கட்டும்'

கல்லூரி போதனு மொழி பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி

"இந்தி மொழி பேசப்படாத பகுதிகளில் இந்தி மொழியைத் திணிப்பதில் பிரயோசனமே இல்லை; மற்ற மாநிலங்களில் வழங்கப்படும் மொழிகளைப்போல், இந்தி, வளர்ச்சி பெற்ற மொழியாகிவிடவில்லை; தெலுங்கு, மராத்தி, மற்றுமுள்ள மாநில மொழிகளைப் போன்று இலக்கண இலக்கிய வளம் பெற்றதாகவும் இல்லை இந்தி 'தேசீய மொழி' என்று கூறப்படுவதே தவறுதம்; அரசியல் சட்ட அமைப்பாளர்கள்கூட, இந்தியை, 'ஒரு தேசிய மொழிக்கு இருக்கவேண்டிய அம்சங்களும் அடையாளங்களும் அற்ற ஒரு அலுவலக மொழியே' என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றனர்."

"பல்கலைக் கழகங்களில் இந்தி மொழி போதனுமொழியாக்கப்படுமானுல், அதன் விளைவாக நாடு முழுவதுமே துன்பத்திற்குள்ளாக நேரிடும்."

"கல்வி, ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் உரிமையானது அல்ல; தங்கள் குழந்தைகள் ஆங்கிலத்தைக் கற்றிருக்க வேண்டும் என பொதுவாக மக்களிடையே ஆர்வம் இருந்து வருவதால், பள்ளிகளிலும் ஆங்கில மொழியே போதனு மொழியாக்கப்பட வேண்டும். பின் தள்ளப்பட்ட வகுப்பு மக்கள்கூட, தற்போது ஆங்கிலம் கற்றிருப்பதினுல் ஏற்படும் நன்மைகளை உணர்ந்துகொண்டுள்ளனர். தனிப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்தை போதனு மொழியாக வைத்துக்கொள்ள சர்க்கார் ஆதரவு கொடுத்து விடுவதால் எவ்விதக் கெடுதலும் நேரிட்டு விடாது."

"மேலும் ஆங்கில மொழிப் புத்தகங்களைத் தமிழ் மொழியிலும், மற்றுமுள்ள மொழிகளிலும் மொழி பெயர்ப்பதில், இரண்டு மொழிகளிலும் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே வேண்டிய அளவு முன்னேற்றம் காண முடியும்."

—இவ்வாறு, டாக்டர் எ கிருஷ்ணசாமி அவர்கள், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில், 'இந்தியாவில் ஆங்கிலத்தின் எதிர்காலம்' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆங்கிலத்திற்கு தற்போது பள்ளிக்கூடங்களில் இரண்டாவது இடம் கொடுக்கப்படுவதை அவர் கடுமையாக எதிர்த்து, 'தனிப்பட்ட கல்வி நிலையங்களில் ஆங்கில மொழியே போதனு மொழியாக இருக்க வேண்டுமென்பதில், சர்க்கார் ஆதரவளிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

"வேறு எப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தபோதிலும், ஆங்கில மொழி, கருத்தை வெளியிடுவதற்கான திறமையையும், எளிய முறையில் எங்கு வேண்டுமானுலும் கருத்துக்களைப் பரவச் செய்யும் தன்மையையும் கொண்ட மொழி—என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது;

"புதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள, தங்கள் தாய் மொழியைத் தவிர அப்புதிய கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவிக்கும் ஆற்றலும் தன்மையும் கொண்ட மற்றொரு மொழியையும் கற்றிருக்க வேண்டும்.

"வருங்காலத்தில் திறமையும் ஆற்றலும் மிக்கவர்களை உருவாக்குவதிலேயே பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்களின் நோக்கம் இருக்க வேண்டும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானுல், கல்வி பயிலும் அத்தனை பேரும் கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்ளும் திறமையுடையவர்களாக இருக்க வேண்டும். இத்துறையில் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உதவக்கூடிய மொழியாகவும் அவர்களது போதனுமொழி இருக்க வேண்டும்."

மேலும் அவர், 'குழந்தைகளுக்கு கணக்கற்ற மொழிகள் கற்பிக்கப்படுவது கூடாது,' என்று குறிப்பிட்டார்.

'ஆங்கிலம் கட்டாயப் பாடமாக வேண்டும்'!

மத்திய பாரத் மாநில கல்வி நிபுணர் குழுவின் தீர்ப்பு!

"உயர்தர நடுநிலைப் பள்ளிகளில் ஆங்கில பாடத்தைக் கட்டாய பாடமாக்க வேண்டும்,"

என்று, மத்திய பாரத் நடுநிலைக் கல்விக் குழுவினுல் இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் நியமிக்கப்பட்ட 9 கல்வி நிபுணர்களடங்கிய குழு சிபாரிசு செய்திருக்கிறது.

"அகில உலக உறவும், உலக ஒத்துழைப்பும் ஏற்பட வேண்டிய இக்காலத்தில், 11 வயது முதல் 17 வயது வரையுள்ள நமது மாணவர்கள் முன்னேற்றத்திற்கு, 'தீவிர தேசப் பற்று' இடையூருக இருக்கக் கூடாது,"

என்றும், அச்சிபாரிசில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், குஜராத்தி மொழி தாய் மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் அதில் கோரப்பட்டுள்ளதாம்.

இத்துடன் ஒரு மாணவன், பல மொழிகளிலும் தேர்ச்சி பெற வேண்டுமென விரும்பினுல், அவன் ஒரே நேரத்தில் ஆறு மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம் என்றுல் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

"புதிய முறையில் ஆங்கில மொழியின் நிலையை இரண்டாண்டுகளுக்குப்பின் கட்டாய மொழிப் பாடமாக்க வேண்டும்; அம்முறை 1958-ல் புகுத்தப்படலாம்" என்றும் அச்சிபாரிசில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'தகராறுகளை யுத்தத்தினால் தீர்த்துவிட முடியாது'!

சோவியத் பிரதமர் கூறுகிறார்

மாஸ்கோ, ஜூலை 15—

"முதலாளித்துவத்திற்கும், சோஷலிசத்திற்குமிடையேயுள்ள தகராறுகளை பலாத்கார முறையினால்—யுத்தத்தினால் தீர்த்துவிட முடியாது; மேற்கத்திய நாடுகளும், சோவியத் சார்பு நாடுகளும், சமாதான, பொருளாதாரப் போட்டிகளின் மூலமாகத் தங்கள் தங்கள் நடைமுறைக் கருத்துக்களை நிரூபிக்க வேண்டும்.

"பல்வேறு நாடுகளின் அரசியல், சமுதாய துறைகளில் உள்ள மாறுபாடுகளின் காரணமாக அகில உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடிவதில்லை என்று கூறப்படுகிறது; ஆனால், அந்த நாட்டில் உள்ள சமுதாய, அரசியல்முறைகளனைத்தும் அந்தந்த நாட்டின் உள்நாட்டு விவகாரங்களாகும்; அந்தந்த நாட்டிலுள்ள சமுதாய, அரசியல் மாறுபாடுகளின் காரணமாக அவை ஒருவருக்கொருவர் மரியாதையுடன் வாழ்வதும், வர்த்தக, கலாச்சார உறவுகளை வளர்த்துக் கொள்ளுவதும் ஒன்றும் சாத்தியமற்றவையல்ல;

"ஒருவருக்கொருவருள் தகராறுகள் இருக்கத்தான் செய்யும்; அவற்றிற்கு சுமூகமான முறையில் பரிகாரம் தேடவேண்டும்; ஒரு நல்ல—நியாயமான தகராறைவிட மோசமான சமாதானம் பரவாயில்லை என்று இப்போது கூறப்பட்டு வருகிறது; நாம் மட்டும் பாடுபட்டு உழைப்போமேயானால் உண்மையான நல்ல சமாதானத்தை ஏற்படுத்த முடியும்."

இவ்வாறு சோவியத் ரஷ்யப் பிரதமர் புல்கானின், நிருபர்களடங்கிய கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

"முடிவு காணாத பல பிரச்சினைகள் உலகில் உள்ளன; இத்தகைய பிரச்சினைகள் வருங்காலத்திலும் இருக்கத்தான் செய்யும்; ஏனெனில் வாழ்க்கையே அப்படித்தான்; ஆனால், இப்பிரச்சினைகள் பற்றி நாம் பொறுமையுடனும், அந்தரங்க சுத்தியுடனும் கூடிப் பேசி சமாதான பரிகாரம் காண முடியும்." என்றும், அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ஜினீவா மாநாட்டில் கருத்தொற்றுமை காண்பதற்கு சோவியத் ரஷ்யா 'பெரு முயற்சி' செய்யும் என்றும், மேற்கத்திய நாடுகளின் அதிகாரிகளும் அவ்வாறே முயற்சி செய்வர் என்று தாம் நம்புவதாகவும், கூறியிருக்கிறார்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் அம்மாநாடு பைசல் காண முடியாவிட்டாலும், அவை எல்லாவற்றிற்கும் பைசல் காண்பதற்கான வழி திறந்துவிட முடியும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவில் சைக்கிள் உற்பத்தி!

புதுடில்லி, ஜூலை 14—

இந்தியாவில், 1947-க்குப் பிறகு சைக்கிள் உற்பத்தி அதிகரித்து வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது ஆண்டொன்றுக்கு 4,37,500 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுவது இனி—7,57,500 ஆக உயர்த்தப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

1947-ல், 48,827 சைக்கிள்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன என்றும், 1954-ல், 3,50,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்றும் தெரியவருகிறது.

அதே நேரத்தில் சைக்கிள் இறக்குமதியும் பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டது என்றும் கணக்கிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

1948—49-ல் 2,64,392 ஆக இருந்த சைக்கிள் இறக்குமதி 1953—54-ல், 90,362 ஆகக் குறைந்துவிட்டதாம்.

சைக்கிள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் பல கம்பெனிகள், படிப்படியாக, தேவையான எல்லா உறுப்புகளையும் இந்தியாவிலேயே தயாரித்துக் கொள்ள முற்பட்டுவிட்டன என்றும் கூறப்படுகிறது.

ஒரு சைக்கிளில் உபயோகிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட உறுப்புகளின் மதிப்பு மிகக் குறைந்த அளவு ரூ. 5 ஆக ஒரு கம்பெனிக்கும், அதிக அளவாக ரூ. 35 ஒரு கம்பெனிக்கும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

'பிரீ வீல்,' சங்கிலி உட்பட பல்வேறு பாகங்களும் இப்போது இந்தியாவிலேயே தயாராகின்றனவாம்.

முழு சைக்கிள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது போக, சுமார் 24 தொழிற்சாலைகள், சைக்கிள்களுக்கான பல்வேறு பாகங்கள், உறுப்புகள் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அந்தத் தொழிற்சாலைகள் கடந்த 1954-ம் ஆண்டில் மட்டும் ரூ. 1,10,00,000 பெறுமான பொருள்கள் உற்பத்தி செய்திருக்கின்றன என்று தெரியவருகின்றது.

5 மாதக் குழந்தையைக் கொன்ற 2 வயதுக் குழந்தை!

ஹௌஸ்டன் (டெக்சாஸ்) ஜூலை 15—

இரண்டு வயதுக் குழந்தை ஒன்று ஐந்து மாதக் குழவி ஒன்றை, வாசனைத் திரவிய புட்டி ஒன்றினாலும், கழி ஒன்றினாலும் அடித்துக் கொன்றுவிட்டதாக இங்கு போலீசார் கூறியிருக்கின்றனர்.

கொல்லப்பட்ட குழந்தையின் தாய் இரவு வேலைக்குச் செல்கையில், வேறொரு பெண்ணிடம் குழந்தையைத் தந்துவிட்டுச் சென்றிருந்தாராம். அப்பெண்மணி, அந்தக் குழந்தை தூங்குகையில், தனது சொந்தக் குழந்தைகள் மூன்றையும் வீட்டில் விட்டுவிட்டு, கடைக்குச் சென்று சாமான் வாங்கச் சென்றிருந்தாராம்; அந்த மூன்று குழந்தைகளில் ஒன்றுதான், பச்சிளம் குழந்தையைத் தாக்கிக் கொன்றுவிட்டதாம்!

திரு-கொச்சி மாநிலத்தில் உணவு உற்பத்தி திட்டம்

மத்திய ஆட்சியினர் வழங்கும் நிதி உதவியின் நோக்கம்

புதுடில்லி, ஜூலை 13—

இந்திய சர்க்கார், திரு-கொச்சி சர்க்காரின் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களுக்காக, 1955—56-ம் ஆண்டுக்கு மொத்தம் ரூ 11 இலட்சம் சகாயத் தொகையும், ரூ 73 இலட்சம் கடனுதவியும் வழங்கியுள்ளனர்.

சகாயத் தொகையில், ரூ. 4,95,000 திரு-கொச்சி மாநிலத்தில் தீவிரமாக உரமிடும் வேலையை மேற்கொள்ளுவதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையின் மூலம், கடலைப் பிண்ணாக்கு உரமாக உபயோகிக்கப்பட்டு வருவதைத் தவிர்க்க வழிவகை செய்யப்படும் என்ற எண்ணத்தின்மீதே இந்த நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. 1,79,000 ரூபாய் புஞ்சை வடிகால் பாசன வசதிக்காக வழங்கப்பட்டிருக்கிறது.

மீண்டும் சமரச முயற்சி

பாகிஸ்தான்—ஆப்கனிஸ்தானம் ஆகியவற்றிடையேயுள்ள தகராறைத் தீர்த்துவைக்க துருக்கி பிரதமர் அட்னம் மென்டாஸ் என்பார் நடுநிலைமையான ராசப் பணிபுரிவார் என்று கூறப்பட்டிருக்கிறது.

செய்திச் சுருள்

★

தி. மு. க. மாநில மாநாட்டு நிதி நாடகம்

உடுமலை பிரேவோ டாக்கீசில், 10—7—55 இரவு 10 மணிக்கு, புதுமை மன்றத்தினரால் 'இரத்தக் கறை' நாடகம் நடைபெற்றது. நாடகத்தில் வசூலான தொகையில், நகரக் கிளை ஒத்துக்கொண்டபடி ரூ 101 தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நாடகத்திற்கு பல்லடம் தோழர் பொன்னுசாமி தலைமை தாங்கினார்; தோழர் ஏ. கே. கலையழகன் பேசினார். பின்பு செயலாளர் இரா. தங்கவேலு நாடக மன்றத்தினருக்கு தன்னுடைய நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டார்.

பாராட்டு விழா

9—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை 10-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், போர்ச்சுகீஸ் சர்ச் தெரு 179, எண்ணுள்ள இல்லத்தில், சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதியை பாராட்டுமுகத்தான் காஞ்சி-மணிமொழியார் தலைமையில் சுவைநீர் விருந்து நடைபெற்றது. தோழர்கள் வி. சீ தமிழ்தாசன், வெ கி. பார்த்தசாரதி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பாராட்டுரைக்கு, தோழர்கள் இளம்பரிதி செங்குட்டுவன் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

கீழப்பாவூர் பஞ்சாயத்துப் போர்டு தேர்தல்

8—7—55ல் நடைபெற்ற கீழப்பாவூர் பஞ்சாயத்துப் போர்டு 5-வது வார்டு உறுப்பினர் இடைத் தேர்தலில், கீழப்பாவூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. இராமநாதன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

விருதை எம்.ஜி.ராமச்சந்தர் மன்றம் திறப்பு விழா

3—7—55-ல் விருதை முத்துராமன்பட்டியில் தோழர் எஸ். ரத்தினம் தலைமையில், மன்றத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் மா. முத்தையா மன்றத்தைத் திறந்து வைத்தார். தோழர் எம். சுப்பையா தி. மு. கழகக் கொடி ஏற்றி வைத்தார். தோழர் சி. பி. சாமி—எம். ஜி. ஆர். படத்தைத் திறந்து வைத்த பின்னர் தோழர் வே. பாஸ்கரன் சொற்பொழிவாற்றினார்.

கரூர் ஷராப் வர்த்தக சங்கம்

14—7—55 காலை 6 மணிக்கு சங்க இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றபோது, ஆண்டு அறிக்கைக்குப் பின் கே. பி. ராதா கிருஷ்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மூங்கில்பாடி சுரங்கத் தொழிலாளர் சங்கம்

திருச்சி மாவட்ட சுரங்கத் தொழிலாளர் சங்கத்தின் மூங்கில்பாடி கிளை அமைப்புக் கூட்டம், மூங்கில்பாடியில் 11—7—55 மாலை 4 மணிக்கு தோழர் எம். வடிவேல் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் ந. அர்ச்சுனனைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

உடற் பயிற்சி மாநாடு

சமீபத்தில் இம் மாநாடு மதுரையில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள உடற் பயிற்சியாளர்கள்—பலசாலிகள் யாவரும் கலந்துகொள்ளுகிறார்கள். ஆரோக்கியம், அழகு, பலம் முதலியவை பெறுவதற்கான பயிற்சிகளும்—விளக்கங்களும் நடைபெறும். பலசாலிகள் யாவரும் தங்கள் பலத்தை மாநாட்டில் நிரூபித்துக் காட்டலாம். தகுதிக்குத் தக்க பரிசுகள் உண்டு. உடற்பயிற்சியில் ஆர்வம் உண்டாக்கவே இம்மாநாடு நடத்தப்படுகிறது. இடமும், காலமும் பின்னர் வெளியிடப்படும்.

கழகச் செய்திகள்

பூலாமேடு தி. மு. கழகம்

கழகத்திற்கு மனை நன்கொடை

19—5—55-ல், கழக இல்லத்தில் தோழர் ஆ. நல்லசாமி தலைமையில், கழகச் செயற் குழு கூட்டம் நடைபெற்றபோது செயலாளர் பொறுப்பிலிருந்து தோழர் சண்முகம் விலகுவதை ஏற்றுக் கொண்டதுடன், புதிய செயலாளராக தோழர் வை. இராசேந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டத்திற்கு தலைமை தாங்கிய தோழர் நல்லசாமி அவர்கள் கழகப் புதிய கட்டிடத்திற்குத்தேவையான மனை அன்பளிப்பாக தருவதாக உறுதி அளித்தார்.

சித்தூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

10—7—55 மாலை 6 மணிக்கு நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் அண்ணமலை தோட்டத்தில் தோழர் ச. கேசவன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் உரைக்குப் பின் தோழர்கள் என். வி. நடராசன், வி. பசுல், என். ஏ. ரஷீத் ஆகியோர் இயக்க இலட்சியங்களை விளக்கிப் பேசினர். கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 20, தோழர் கணபதி ரூ. 5 ஆக ரூ. 25-ம் தோழர் நடராசனிடம் அளிக்கப்பட்டது.

திருக்களம்பூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

11—7—55 மாலை 5 மணியளவில் தோழர் குழ. நெடுஞ்செழிய பாண்டியன் தலைமையில், தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் 'அரசியலும், விவசாயிகளும்' என்பது பற்றியும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'சமூக சீர்திருத்தம்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தேவகோட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

11—7—55ல், காந்தி சதுக்கத்தில், தோழர் என். கதிரவன் தலைமையில் பொதுக்கூட்டமும், தூத்துக்குடி தோழர் ஜி. அப்பாசாமியால், 'மந்திரமா தந்திரமா?' என்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இராம. முத்துவேலு, குரு. இதயமணி, கல்லங்குடி மதிமுகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சித்தூர் தி. மு. க. (கிளை 2)

10—7—55 மாலை 5 மணிக்கு, சித்தூர் தி. மு. கிளைக் கழகம்-2. தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நிறுவப்பட்டு தோழர் செ. பாலுவை செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கவுந்தபாடி தி. மு. கழகம்

10—7—55 இரவு 7 மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், சென்னை மாநில அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்ட தீண்டாமை ஒழிப்பு சுவரொட்டி பற்றி சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செண்டங்காடு தி. மு. கழக பொதுக்கூட்டம்

9—7—55 மாலை 6 மணி அளவில், தோழர் கனகசபை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சுப. முத்துராமன், அகமது, மாணிக்கம் தனிக்கொடி ஆகியோர் பேசிய பிறகு தோழர் க. அன்பழகன் நீண்டநேரம் உரையாற்றினார்.

ஆவணத்தாங்கோட்டை தி. மு. கழகம்

6—7—55 இரவு 7 மணிக்கு, தோழர் எஸ். இராமசாமி இல்லத்தில், தோழர் சி. த. மேகராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழக வரவு-செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், விரைவில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவது என்றும், கழகக் கொடி பறக்கவிட கொடிக் கம்பம் நடுவதற்கு இடம் தந்து உதவிய தோழர் எஸ். இராமசாமி, மற்றும் பலருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குசவப்பேட்டையில் தி. மு. கழக பிரசாரக் கூட்டம்

14—7—55 மாலை 6½ மணிக்கு ஆரணி தி. மு. கழக கிளையின் சார்பில் குசவப்பேட்டை கிராமத்தில் தோழர் கிருட்டிணன் தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நெடுமாறன், வெற்றிவீரன், ஜேம்ஸ் ஆகியோர் கழகக் கொள்கைகள் பற்றி பேசினர்.

பிறப்பு

சென்னை 2-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் மு. த. இளஞ்சேரன் அவர்களின் துணைவியார் இராசம்மாள் 22—5—55ல், ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; அப்பெண்மகவுக்கு 'ஜோன் பொற்சிலை' என பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

5—7—55ல், உறையூர் தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் சி மாரியப்பன் துணைவியார் தோழியர் காமாட்சி ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும்-சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

கரூர் தி. மு. கழகத் தோழர் எம். மாரிமுத்து அவர்களின் துணைவியார் தோழியர் பாப்பா அம்மையார் 7—7—55 காலை 5 மணிக்கு, பெண் மகவு ஒன்றுக்கு தாயானார். தாயும் சேயும் நலம். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

10—7—55-ல், சென்னை—செங்குன்றத்திற்கடுத்த நியமாகரில், தோழர் எம். கணபதி தலைமையில் நடைபெற்ற திருமணத்தின்போது, தோழர் மு. எதிராசன் அவர்களது பெண் மகவுக்கு 'இசைமணி' எனப் பெயரிடப்பட்டதின் நினைவாக 'நம்நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

சென்னை—கீழ்ப்பாக்கம் தோழர் பி. பாலசுந்தரம் அவர்கள் 27—6—55-ல், இயற்கையெய்தியமை குறித்து நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ஆ.-ர்.)

* *

சென்னை 46-வது வட்ட தி மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் இரா. அகமழகன் வாழ்க்கைத் துணைவியார் இராதாபாய் இயற்கை எய்தியதையொட்டி 13—7—55 மாலை 6 மணியளவில் நடைபெற்ற இரங்கற்கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

விவசாயிகள் — மிராசுதார் பேச்சுவார்த்தைகள் முறிவு

சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அனுமதி

திருச்சி, ஜூலை 17—

குளித்தலையில், திருச்சி மாவட்ட அதிகாரி (கலெக்டர்) கடந்த 15-ந் தேதியன்று நடத்திய விவசாயிகள்—மிராசுதாரர்களின் பேச்சு வார்த்தைகள் முறிவுற்றதை ஒட்டி, விவசாயிகள் எல்லோரும், தாங்கள் சென்ற ஆண்டு விவசாயம் செய்த நிலத்தில் இந்த ஆண்டும் விவசாயம் செய்ய துவங்கிவிட்டனர்.

தாங்கள் அவ்வாறு நிலத்தில் விவசாயம் செய்வதற்கு மாவட்ட அதிகாரி அனுமதி தந்திருப்பதுடன், தேவையானல் போலீஸ் பாது காப்புத் தருவதாகக் கூறியிருப்பதாயும் விவசாயிகள் தெரிவித்திருக் கின்றனர்.

உள்ளூர் மிராசுதார்கள், தங்கள் நிலத்தில் அந்த விவசாயிகள் அத்து மீறி நுழைந்ததாகக் குற்றம்சாட்டி லாலாபேட்டை போலீசாரிடம் புகார் செய்திருக்கின்றனராம். தங்கள் நிலத்தில் விவசாயிகள் நுழையாமல் பார்த்துக்கொள்ளும் படி போலீஸ்பாதுகாப்பும்அவர்கள் கோரியிருப்பதுடன், இதுபற்றி, கவர்னர், முதன் மந்திரி, சர்க்கார் பிரதம செயலாளர் ஆகியோருக்கு கூட்டுத் தந்தி அடித்திருப்பதாயும் கூறப்படுகிறது.

கிராமந்தோறும் ஆயுதந்தரித்த போலீசார் காவல் புரிந்து வருகின்றனராம்.

ஐதராபாத் மாநில ‘நிலச் சீர்திருத்தம்’

ஐதராபாத் மாநிலத்தில் உள்ள ‘பட்டா’ குடிவாரதார்களை உண்மையான நிலச் சொந்தக்காரர்களாக்க மாநில சர்க்கார் முடிவு செய்திருப்பதாக முதன் மந்திரி அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

இது, ஐதராபாத் குடிவார விவசாய நிலத்திருத்தச்சட்டம் 38-வது பிரிவின்படி அமுல் செய்யப்படலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சட்டப் பிரிவு முதலில் கம்மாமெத் மாவட்டத்தில் ஆகஸ்டு 15-ந் தேதி முதல் அமுல் செய்யப்பட்டு, பின்னர் மாநிலம் முழுவதும், அடுத்த தேர்தலுக்கிடையில் உள்ள 18 மாதங்களுக்குள்ளாக அமுல் செய்யப்படும் என்று சர்க்கார் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

தங்களின் குத்தகைதாரர்களுக்கு நிலத்தை விற்பனை செய்வதற்காக நிலச் சொந்தக்காரர்களுக்கு சர்க்கார், நஷ்டஈடு தரும் என்றும், பின்னர் அந்த நஷ்டஈட்டுத் தொகையை புது நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து சர்க்கார், தவணைகளில், நிலச் சட்டப்படி வசூலித்துக்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

மாநிலத்தில் நிலச் சீர்திருத்தங்களை அமுல் செய்வதற்காகவே சர்க்கார் இதனை செய்வதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்.

நில உடைமை பற்றிய நிர்ணயம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கல்வி ஆண்டுத் துவக்கம்

கருத்தறிவிக்கக் கோரிக்கை

இதுவரையிலும் ஒவ்வொரு ஆண்டிலும் ஜூலை மாதம் தான் கல்வி ஆண்டுத் துவக்கமாக இருந்து வருகிறது; ஆனால் இதை மாற்றி, ஒவ்வொரு கல்வி ஆண்டும், ஜனவரித் திங்களிலிருந்தே ஆரம்பிப்பதென்று ஒரு உத்தேசம் இருந்து வருவதாகவும், இந்த உத்தேசம் பற்றி சென்னை மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களிடமும், மாநில கல்வி அதிகாரிகளிடமும் சென்னை சர்க்கார் அவரவர் கருத்தைத் தெரிவிக்குமாறு கோரியுள்ளனர் என்றும் தெரிகிறது.

இவர்களது பதில் கிடைத்த பின்னரே சர்க்கார் இப்பிரச்சினை குறித்து ஒரு முடிவுக்கு வருமெனவும் கூறப்பட்டிருக்கிறது.

பார்மோசாவை விடுவிக்க தீவிரமுயற்சி

சீன மக்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி?

“பார்மோசாவை விடுவிப்பதற்கு, இராணுவத்தைத் தீவிரமாகப் பலப்படுத்தவேண்டும்,” என்று மக்கள் சீன சர்க்கார் தற்காப்பு அமைச்சர் பெங்—டே—ஹுவாய் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீன மக்கள் எல்லோரும் கட்டாய இராணுவப் பயிற்சி பெறும்படி செய்யவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளாராம்.

வேதாளம் மீண்டும்

முருங்கை மரம் ஏறுகிறதா?

கொரியப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், வட கொரியக் கம்யூனிஸ்டுகள் மீது உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தங்கள் இராணுவம் தயாராக இருப்பதாக இரகசியமாகப் கூடிப் பேசியபின், தென் கொரிய இராணுவத் தலைவர்கள் அறிவித்திருக்கின்றனராம்!

ஜினீவாவில், 4 வல்லரசு நாடுகளின் அதிபர்களும் கூடிப் பேச இருக்கும் இந்தத் தருணத்தில் இவ்வறிக்கை வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கடைசி மூச்சுள்ளவரை முயற்சிப்போம்!

பாராட்டு விழாவில் பண்டிதர்

இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர், ‘இராஷ்டிர பவனத்’தில் நடத்திய பாராட்டு விருந்தொன்றில், பிரதமர் நேருவுக்கு ‘பாரத ரத்னா’ என்ற பட்டத்தை வழங்கினார்.

பிரதமரைக் கலந்தாலோசிக்காமலேயே தாம் ஒரு முறை அரசியல் சட்ட விதிகளின்படி நடக்கத் தவறிவிட்டதாக இராசேந்திரர் கூறினார்.

தமக்களிக்கப்பட்ட பட்டத்திற்கும், வரவேற்புக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, பிரதமர் நேரு, ‘உலகத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நாம் முயற்சிக்கிறோம்—கடைசி மூச்சுள்ளவரை நமது சர்வ சக்தியையும் உபயோகித்து அதற்காக மேலும் முயற்சிப்போம்,’ என்று கூறியிருக்கிறார்.

சென்னை தொழிலதிபர்களுக்கு மலேயாவில் தொல்லை?

தங்கியிருக்கும் காலத்தை நீடிக்க சர்க்கார் மறுப்பு

இந்தியத் துணிகளைப் பிரபலப் படுத்துவதற்காக மலேயா வந்துள்ள கோவை, மைசூரைச் சேர்ந்த மூன்று தொழிலதிபர்களுக்கு மலேயாவில் தங்கியிருப்பதற்கான அவகாசத்தை நீடிக்க மலேயா சர்க்கார் மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஜப்பான், ஹாங்காங் ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பும் வழியில் மலேயாவில் தங்குவதற்கு அவர்கள் கோரின ‘டிரான்சிட் விசா’க்கள் நீடிப்பு மறுக்கப்பட்டுள்ளதாம்.

மாநில மாநாட்டு நிதிக்காக

நாகர்கோவிலில் இன்னிசை விருந்து

22—7—55 வெள்ளி இரவு 10 மணிக்கு, நாகர்கோவில் அசோகா தியேட்டரில், மதுரை தோழர் எஸ். முத்து தலைமையில், தோழியர் பி. எஸ். செல்வா, தோழர் சி. ஆர். சௌந்தரராஜன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

நன்கொடை: ரூ. 10, 5, 3, 1 அணா 8.

புதுவையில் இன்று பொதுத் தேர்தல்

புதுவை, ஜூலை 18—

புதுவை மாநிலத்தில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. புதுவை ராஜ்ய சட்ட சபைக்கு 39 உறுப்பினர்களும், 174 நகரசபை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதுவரை, சட்டசபைக்கான 39 இடங்களில் மூன்றும், முனிசிபல் இடங்களில் 26-ம் போட்டியின்றியே முடிவு செய்யப்பட்டுள்ளனவாம்.

★

ஏன் இந்த வேறுபாடு?

“புதுச்சேரி ஒரு தனி மாநிலமாக இருந்து அபிவிருத்தி அடைவதற்கான சகல [illegible]களையும், உதவியையும் இந்திய சர்க்கார் செய்து தரும்,”

என்று சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் கூறியிருக்கிறார்.

★

அர்த்தமற்றதாம்!

“புதுவை ஒரு தனி மாநிலமாக இயங்குவது அர்த்தமற்றது; அது சென்னை மாநிலத்துடன் இணைந்துவிடுவதே நல்லது—அப்படிச் செய்தால் புதுவை மக்களுக்கு எல்லா வசதிகளையும் சென்னை சர்க்கார் செய்து தருவர்.”

என்று சென்னை மாநில நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், புதுவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

ரூ. 4 கோடி செலவில் புதுவைக்குத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள புதுவை ராஜ்யத்திற்கென ரூ. 4 கோடி செலவுடைய திட்டங்கள் திட்டக் குழுவிடம் தரப்பட்டுவிட்டனவாம்.

புதுவைப் பகுதிகள் பிரெஞ்சு சர்க்காரிடமிருந்து விடுதலை பெற்ற கடந்த 3 மாத காலத்திற்குள், புதுவை மாநிலத்திற்காக இந்திய சர்க்கார் ரூ 17 லட்சமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இம்மாநிலத்திற்கென ரூ. 4 கோடி ஒதுக்கியுள்ளனர் என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

ரூ. 2,27,00,000 செலவில்...

புத்தரின் 2,500-வது ஆண்டு விழா

அடுத்த ஆண்டில், இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய 3 நாடுகளும் சேர்ந்து ரூ 2,27,00,000 செலவு செய்து புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி விழாவில், இந்தியா மட்டும் ரூ. 77 இலட்சம் செலவு செய்யும் என்றும், இதில் விழாச் செலவிற்கென மட்டும் ரூ. 37 இலட்சம் செலவிடப்படும் என்றும் மத்திய அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியார் கூறியிருக்கிறார்.

இந்தோனேஷியாவில் நெருக்கடி!

மந்திரி சபையின் ‘இராஜிநாமா’ ஏற்கப்படவில்லை

டாக்டர் அலிசஸ்த்ரோமித் ஜோஜோ தலைமையில் உள்ள இந்தோனேஷிய மந்திரி சபை, குடியரசுத் தலைவர் சுகர்ணோவிடம் தனது பதவி விலகல் கடிதத்தைத் தாக்கல் செய்ததாகவும், அதனை ஏற்றுக்கொள்ள தலைவர் மறுத்துவிட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

மேஜர் ஜெனரல் ஹாம்பெங்யுடோ ஜோ இராணுவத் தளபதியாக நியமனம் செய்யப்பட்டதை இதர இராணுவத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதை ஒட்டி எழுந்த நெருக்கடியின் விளைவாகவே அலி ஜோஜோ ராஜினாமா செய்ய முற்பட்டிருக்கிறாராம்.

தன்னால் மக்கள் சபையில் பெரும்பான்மைச் செல்வாக்கைப் பெற்றிருக்க முடியாது, என்று அவர், சுகர்ணோவிடம் கூறினாராம்.

469 வெட்டுப் பிரரேபணைகள்

கர்னூல், ஜூலை 18—

ஆந்திர சட்டசபையில் இன்று முதல் சுமார் 20 வேறு தலைப்புகளில் மானியங்களுக்காக எழுப்பப் படவிருக்கும் வரவு-செலவுத் திட்டக் கோரிக்கைக்கு சுமார் 469 வெட்டுப் பிரரேபணைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இந்தப் பிரரேபணைகளை சுமார் 47 உறுப்பினர்கள் தந்திருக்கின்றனர்; இவர்களில், காங்கிரஸ்காரர்களும் இருக்கின்றனர்.

கைதிகளுக்குக் கைக்குத்தல் அரிசி

மூன்று மாவட்ட சிறைகளில் பரீட்சார்த்தத் திட்டம்

சென்னை மாநிலத்தில், சிறைகள், மருத்துவமனைகள் ஆகிய சர்க்கார் நிறுவனங்களில் தற்போது அளிக்கப்படும் இயந்திரத்தால் அரைக்கப்படும் அரிசிக்குப் பதிலாகக் கைக்குத்தல் அரிசியை விநியோகிப்பது குறித்து சென்னை சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனராம்.

ஆரம்பத்தில் சென்னை மாநிலத்தில் திருச்சி உட்பட 3 மாவட்டங்களில் உள்ள மாவட்ட சிறைகளில் மட்டுமே இம்முறை பரீட்சார்த்தமாக அமுல் நடத்தப்படலாமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பன்முறை கேட்டும் பலனில்லையாம்!

சென்னை நகரசபை கோரிக்கையில் மத்திய ஆட்சியின் போக்கு

சென்னை நகரில் நான்கு இரயில்வே ‘லெவல் கிராசிங்’குகளும், ஒரு பாதாளப் பாதையும் கட்டுவதற்காகும் செலவான ரூ. 78 இலட்சத்தில், ரூ. 36 இலட்சத்தை ஏற்றுக்கொள்வதென சென்னை சர்க்கார் அறிவித்துள்ளதாகவும், இந்த வேலையில் இத்தொகைக்கு மேலும் சென்னை நகரசபை சர்க்காரை எதிர்பார்க்கக்கூடாதென்று சர்க்கார் குறிப்பிட்டிருப்பதாகவும் தெரிகிறது.

ஆனல் நகரசபையோ, மேற்படி வேலைகளுக்காகும் மொத்தச் செலவையும் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளதாம்.

இதுவிஷயத்தில் மத்திய சர்க்காரிடம் பலமுறை கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தும்கூட, செலவில் ஒரு பகுதியைக்கூட ஏற்றுக் கொள்ள மத்திய சர்க்கார் தயாராக இல்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அடங்காப் பிடாரிகள் யார்?

‘அர்ச்சனை’கள் பரிமாற்றம்!

“நான் அடங்காப் பிடாரியல்ல; என்னைக் கட்டுப்படுத்திவிட முயன்றதின் மூலம் தங்களுடைய அதிகார வரம்பை மீறிய தேசிய நிர்வாகக் குழுதான் உண்மையான அடங்காப் பிடாரி”

என்று, டாக்டர் லோகியா பம்பாயில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

ம. சோ. கட்சி, ‘ஜனநாயக’ முறையில் சீர்திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், இல்லாவிடின் தம்மைப் பின்பற்றும் சோஷலிஸ்டுகள் அனைவருமாகச் சேர்ந்து புதிய ஒரு சோஷலிசக் கட்சியை ஆரம்பிக்கக்கூடும் என்றும் அவர் அக்கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்.

இயந்திர ‘உலை’கள்

இந்தியாவிற்கென ரஷ்யாவில் தயாராகின்றனவாம்!

இந்தியாவின் காலநிலைக்கேற்ப விசேட வசதிகள் பொருந்திய ‘உலைகளை’த் தயாரித்து வருவதாக ரஷ்யா தெரிவித்திருக்கிறது.

‘டர்படைன்’கள், ‘கம்ப்ரெஸ்ஸர்’கள் போன்ற இயந்திரங்களில் குளிர்ச்சி படுத்தும் கருவிகள் பிணைக்கப்படுகின்றனவாம்.

குஷ்ட நோய் நிவாரண நிலையங்கள்

30 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி ஆராய்ச்சிக் கழகமாம்!

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நாடு முழுமையிலுமாக 100 குஷ்டரோக கட்டுப்பாடு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்,” என்று, மத்திய சுகாதார உதவி மந்திரி திருமதி மரகதம் தெரிவித்திருக்கிறார்.

குஷ்ட நோய் நிவாரண சிகிச்சைக்கென சென்னை மாநிலத்தில் 200 மருத்துவப் பட்டதாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான திட்டமொன்று இருப்பதாகவும், சென்னை மாநிலத்திலுள்ள திருமணி குஷ்டநோய் நிவாரண சானிடோரியத்தின் ‘கிரேட்’ உயர்த்தப்படும் என்றும், இங்கு ரூ. 30 இலட்சம் செலவில் அகில இந்திய பயிற்சி, ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சோர்வு தந்த சோக முடிவு!

ஒரு படகோட்டி, சுமார் 250 மணங்கு உணவுப் பண்டம் ஏற்றப்பட்டிருந்த படகு ஒன்றில் இருந்த ஓட்டை வழியாக படகினுள் நுழைந்திருந்த தண்ணீரை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான். படகில், நீர் அள்ள அள்ள நுழைந்து கொண்டிருந்தது; சோர்ந்துவிட்ட அவன் சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டான்; அதன் விளைவாக, வெள்ளப் பெருக்கு நிரம்பியிருந்த கண்டாக் ஆற்று நீர் படகினுள் புகுந்து ஆற்றுக்குள் படகை அமுக்கிவிட்டது; படகோட்டியும் படகுடன் மூழ்கிப் பரிதாபகரமான முடிவு பெற்ற சோகச் செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

பக்ரா அணை கட்டிமுடிக்கப்பட்டதும், டில்லியில் உள்ள குதுப்மினரைப் போல் மூன்றுமடங்கு உயரமுள்ளதாக இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.